சுருக்கம்

ஆசிரியர் பயிற்சி - ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை - வசதிக் கட்டணம் மற்றும் தனிக் கட்டணம் வசூல் செய்தல் - தற்போதைய கட்டணமான ரூ.450/- லிருந்து ரூ.5000/- ஆக உயர்த்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது

பள்ளிக் கல்வித் துறை

**அரசாணை (நிலை) எண்: 107** **நாள்:17.7.2002**

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண் 390 கல்வி நாள் 18.6.1993
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித ந.க.எண் 10279/சி2/2001 நாள் 3.7.2002

**ஆணை**

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையின்போது வசதிக் கட்டணம் மற்றும் தனிக்கட்டணம் என ரூ.450/- தற்போது வசூல் செய்யப்பட்டு வருகிறது. இக்கட்டண விகிதமானது மிகக் குறைவாக உள்ளதாகவும், புதிய பாடத்திட்டத்திற்கேற்ப மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் மேற்கொள்ள வேண்டிய அன்றாட செலவுகளை ஈடுசெய்ய இயலவில்லை எனவும் கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையில், அதனை அரசு தீர ஆராய்ந்து தற்போதைய கட்டணமான ரூ.450/- லிருந்து ரூ.5000/- ஆக கீழ்க்குறிப்பிட்டவாறு 2002-2003ம் கல்வியாண்டு முதல் உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வசதிக் கட்டணம்/கற்பிப்புக் கட்டணம் | ரூ.300.00 |
| 2 | மருத்துவ ஆய்வுக் கட்டணம் | ரூ.30.00 |
| 3 | சேர்க்கைக் கட்டணம் | ரூ.3500.00 |
| 4 | உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கட்டணம் | ரூ.50.00 |
| 5 | நூலகக் கட்டணம் | ரூ.100.00 |
| 6 | ஆய்வகக் கட்டணம் | ரூ.150.00 |
| 7 | களப்பணிக் கட்டணம் | ரூ.125.00 |
| 8 | எழுதுபொருள் கட்டணம் | ரூ.200.00 |
| 9 | ஒலி-ஒளிக் கட்டணம் | ரூ.200.00 |
| 10 | நாட்காட்டி | ரூ.25.00 |
| 11 | மாத இதழ் | ரூ.25.00 |
| 12 | பொழுதுபோக்கு மற்றும் கைவினைப் பொருள் கட்டணம் | ரூ.25.00 |
| 13 | சாரணர் சாரணியர் கட்டணம் | ரூ.50.00 |
| | மொத்தம் | ரூ.5000.00 |

இக்கட்டண விகிதமானது மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அங்கீகாரம் பெற்ற தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் முதலாமாண்டு சேர்க்கையின்போது ஒரே சீராக வசூல் செய்யப்படவேண்டும். இக்கட்டண விகிதத்தில் சேர்க்கைக் கட்டணமான ரூ.3500/-னை அரசுக் கணக்கில் அந்தந்த நிறுவனங்கள் செலுத்த வேண்டும். மீதித் தொகையான ரூ.1500/-னை அந்தந்த நிறுவனங்களில் சேமிப்புக் கணக்கில் செலுத்தி அவ்வப்போது நிறுவனங்களில் ஏற்படும் செலவுகளை மேற்கொள்ளலாம்.

2. இவ்வாணையானது நிதித்துறையின் அ.சா.கு. எண்2373/FS/P/2002 நாள் 11.7.2002ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு. சுப்புராஜ்,
அரசு செயலாளர்

பெறுநர்
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை - 6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை - 6
முதல்வர்கள்/தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள்/அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்/ அங்கீகாரம் பெற்ற தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை -18
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை- 79 (இந்த அரசாணையை தமிழ்நாடு அரசு இதழில் தகவலுக்காக வெளியிட)

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்